4 டிசம்பர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

திருவருகைக் காலத்தின் இரண்டாம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்மஸ் காலம் (25 டிசம்பர் – 1 ஜனவரி 2023)**

# கிறிஸ்மஸ் காலம்

டிசம்பர் மாதம் முழுவதும் நம்முடைய திருவழிபாட்டு நாட்காட்டியில் கிறிஸ்மஸ் காலம் என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்மசுக்கு முந்திய நாள் இரவு தொடங்கி ஆண்டவரின் திருமுழுக்கு ஞாயிறு வரை கொண்டாடப்படுகிறது. கிறிஸ்மஸ் காலம் டிசம்பர் 25 ஐ தவிர்த்து, கிறிஸ்மஸ் கொண்டாட்டம் எட்டு நாட்கள் கிறிஸ்துவின் பிறப்பின் மறையுண்மையை நாம் தியானிக்கிறோம். ஆங்கிலத்தில் ஒக்டேவ் கிறிஸ்மஸ் என்று அழைக்கின்றோம். இது டிசம்பர் 25 முதல் ஜனவரி 1 - அன்னை மரியா கடவுளின் தாய் என்னும் விழாவோடு நிறைவடைகிறது.



**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

எதிர்நோக்கைத் தரும் கடவுள், நம்பிக்கையால் உண்டாகும் பெருமகிழ்ச்சியாலும், அமைதியாலும் உங்களை நிரப்புவாராக...

(உரோமை: 15:13)

இன்று திருவருகைக் காலத்தின் இரண்டாம் ஞாயிறில் ஏற்றப்படும் ஊதா நிற மெழுகுத்திரி நம்பிக்கை என்னும் கருப்பொருளை அடையாளப்படுத்துகிறது. மேலும் இது மரியாவும் யோசேப்பும் பெத்லகேமை நோக்கிப் பயணித்ததை நினைவுகூரும் வகையில் பெத்லகேம் மெழுகுத்திரி எனவும் அழைக்கப்படுகிறது.

முதல் வாசகத்தில் எசாயா மெசியாவின் வருகையின்போது இருக்கும் உலகைப் பற்றி விவரிக்கிறார். 600 ஆண்டுகளாக செயலற்று இருந்த தாவீதின் அரசகுடும்பத்தின் அதிகாரத்தைப் பற்றியும் கூறுகிறார். இயேசு அரசராகவும், மெசியாவாகவும் வரும்போது, உயிரற்ற ஈசாயின் தளிரிலிருந்து புதியத் தளிர் தோன்றப்போகிறது என்பதையும் எடுத்துரைக்கின்றார். கடவுளின் தூய ஆவியாரின் ஏழு கொடைகள் அதன் தன்மையையும் முழுமையையும் எடுத்துக்காட்டியது. தூய ஆவியின் வல்லமைமிக்க அதிகாரத்தை இயேசு பெற்றுக்கொள்வது தம்முடைய சொந்த அதிகாரத்தில் அல்ல; தன்னை முழுவதுமாக நிரப்பிய தூய ஆவியானரே அதன் ஊற்று என்பதை இயேசு புரிந்துகொண்டார்.

உரோமையருக்கு எழுதிய கடிதமான இன்றைய இரண்டாம் வாசகத்தில், பவுல் இவ்வாறு கூறுகிறார். மறைநூலில் எழுதியுள்ள அனைத்தும் நிறைவேறும் பொருட்டு கடவுளின் மாட்சிக்காக, இயேசு அனைத்து துன்பங்களையும் ஏற்றுக்கொண்டார். நமக்கு மன உறுதியும் ஊக்கமும் தருவதற்காகவும், நம்பிக்கை எதிர்நோக்கு மற்றும் அன்பைக் கட்டியெழுப்ப இறைவார்த்தை எழுதப்பட்டது என்றும் கூறுகிறார்.

இன்றைய நற்செய்தியில் திருமுழுக்கு யோவானின் அறிவிப்பு இவ்வாறு தொடங்குகிறது. பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது; ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்” என்னும் இந்த வார்த்தைகள் இயேசுவின் வார்த்தைகளைக் கண்ணாடிபோல் காட்டுகிறது. பாலைவனம் என்பது ஏழ்மைக்கும் எளிமைக்கும் எடுத்துகாட்டு. அங்கு கவனச்சிதறல்கள் மற்றும் ஆசைகள் இல்லாத இடம். அதனால் கடவுள் குரல் அங்குக் கேட்கப்படும். செல்வம், இன்பம், அதிகாரம் மற்றும் மரியாதை நம்மைத் தூண்டுகின்றன. ஆனால் கடவுள் என்ன கூறுகிறார். கடவுளின் குரலைக் கேட்க நாம் தனிமையானதோர் இடத்திற்குச் செல்லவேண்டும். யோவானின் வார்த்தைகள்: “ மனம் மாறுங்கள்” இது புதிய பாதைக்கும் புதிய இலக்குக்கும் செல்வதற்கான தொடக்கமாக நமக்குத் தரப்படும் கட்டளை.

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா: 11: 1-10;

திருப்பாடல்: 71: 2, 7-8, 12-13, 17;

உரோமையர்: 15: 4-9;

மத்தேயு: 3: 1-12.

INTERNAL CIRCULATION ONLY
BUL 49/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org